சேகரிப்பு குறித்து சென்னைப் பொருட்காட்சிசாலையின் சிறு அறிக்கையாக தனி ஆராய்ச்சி நூல் ஒன்று வெளியிடக் கருதப் பட்டுள்ளது.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, பண்டைத் தமிழ் அகத்தின் வரலாற்றினை அறிய செப்பேடுகள், நாணயங்கள், உதவி யாக இருப்பதன் காரணமாக, அவற்றைப் பற்றி பொதுமக்கள் அறியும் வகையில், அரசு புத்தகங்கள் வெளியிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத்தலைவர் அவர்களே, இந்த நாணயங்களில் ஒரு புறத்தில் பிராமி எழுத்துக் களும், மறுபுறத்தில் கடல் அலை போன்றவைகளும், முக்கோண மலைகள் போன்ற வடிவங்களும் காணப்படுகின்றன; இவை
முற்பகல் 9-30 ஆராயப்பட்டு வருகின்றன. அந்த எழுத்துப்படி, சின்னன், சேந்தன், என்ற பெயரும் காணப்படுகிறது. இந்த சேந்தன் சங்க காலத்தைச் சேர்ந்தவன்தானா அல்லது வேறு ஒருவனா என்பது பற்றி ஆராய்ச்சி செய்த பிறகு முழு விவரங்களும் தெரிந்த பிறகு, ஒரு சிறு நூலாக வெளியிட சர்க்கார் கருதி யுள்ளது.

Special exhibition of manuscripts.

* 74 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government Museum at Madras has organised a special exhibition of some of the manuscripts of the great freedom fighters and Tamil Poet Subramania Bharathi ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) புகழ் பெற்ற தமிழ்க் கவிஞர் சுப்பிரமணிய பாரதியின் கையெழுத்துப் படிகளைக்கொண்ட சிறப்புப் பொருட்காட்சி ஒன்று 1967, செப்டம்பர் திங்களில் தமிழ்நாடு அரசாங்க அரும்பொருட் காட்சி சாலையால் நடத்தப்பட்டது. இந்தப் பொருட்காட்சியில் கவிபாரதி யாரின் கண்ணம்மா பாட்டுக்கள், குயில் பாட்டு, கீதை உரை, அகச்சித்திரம் என்னும் தலைப்பில் ஒரு நாடகம், பதஞ்சலி யோக சூத்திரம் சந்திரிகாவின் கதை பற்றிய உரைநடைப் பகுதி ஆகியவை இடம்பெற்றன. இந்த அரும் பொருட்காட்சியில் கவி பாரதியாரின் கையெழுத்துப் படிகள் மட்டுமே வைக்கப்பட்டிருந் தன. ஏனைய சுதந்திரப் போராட்ட வீரர்களின் கையெழுத்துப் படிகள் இடம் பெறவில்லை.

திரு. கே. விநயகம் : சார், வ. உ. சிதம்பரனார் எழுதிய சில நூல்கள் இருப்பதாகத் தெரிகிறதே, அவர் கையாலேயே எழுதிய கையெழுத்துப் பிரதி யாரிடம் இருக்கிறது என்று அறிந்து, அதை வாங்கி ம்யூசியத்தில் வைக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

1968 பிப்ரவரி 19]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சுப்பிரமணி பாரதி யார் அவர்கள் எழுதிய கையெழுத்துப் பிரதிகள் இங்கே வைக்கப் பட்டிருக்கின்றன.

The Museum does not have manuscript of any other freedom fighter. என்று இருக்கிறது

ஆகவே, வ.உ.சி. கையெழுத்துப் பிரதிகள் இருப்பதாகத் தெரிய வில்லை. எங்கேயாவது இருப்பதாகத் தெரிந்து கவனத்திற்குக் கொண்டுவந்தால், அதை அரும் பொருள் காட்சியில் வைக்கலாம்.

ஹாஜி. ம. மு. பீர்முஹம்மது : தலைவர் அவர்களே, பழம் பெரும் புலவர்கள் இயற்றிய பல இலக்கியங்கள் ஏட்டுப் பிரதிகளாக பல குடும்பங்களில் இருக்கின்றன என்கிற உண்மை தெரிகிறது. அது போன்ற கையெழுத்துப் பிரதிகளை சேகரித்து, அவற்றைக் காட்சி சாலையில் வைக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பழங்காலத்தில் திரு. உ. வே. சுவாமிநாத அய்யர் அவர்கள் ஓலைகளையும், பல்வேறு சுவடிகளையும் சேகரித்திருக்கிருர்கள், சரஸ்வதி மஹாலிலும் காப்பாற்றப்பட்டு வருகின்றன. சென்னை யிலும் பழங்கால ஏடுகள் பல்கலைக் கழகத்தால் காப்பாற்றப்பட்டு வருகின்றன. அப்படிப்பட்ட படிவுகள், அரும் பெரும் சுவடிகள் இருந்து, யாராவது தருவதற்கு முன்வந்தால், அதைக் காப்பாற்ற மாநில அரசு முயற்சி செய்யும்.

நிலப்பரப்பு அளவு முறையில் மாற்றம்

* 75 வினு.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு உணவு, வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) நமது ராஜ்யத்தில் பூமியின் விஸ்திரணம் எக்கர் லிங்க்ஸ் என்கிற கணக்கிலிருப்பதை மெட்ரிக் சிஸ்டத்தின் அடிப் படையில் மாற்றியமைக்குமாறு மத்திய சர்க்கார் மாநில அரசாங்கத்தைக் கோரியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) & (இ) ஆம். இது அரசாங்கத்தின் ஆய்விலுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன்: இதுவரையில் மெட்ரிக் சிஸ்டம் அடிப்படையில் மாற்றியமைக்க முடியாத நிலைமை இருக்கும் போது, அதிலே ஈடுபட்டிருக்கிற சர்வேயர்கள் போன வாரத்தில் கூட 100 பேர்களை வேலையிலிருந்து நீக்கப் பட்டிருக் கிருர்கள். இந்த வேலையைப் பூர்த்தி செய்யும் உத்தேசம் உண்டா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.